## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 12/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1 P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர் செல்வம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பொன்னுசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

**2,3, 4 ம் எதிரிகள் ஆஜர்**

**1 ம் எதிரி இறந்து விட்டார்**

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை புக்குளத்தில் வசித்து வருகிறேன். மேடை அலங்கார வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி பைசல் சென்று விட்டோம். விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன். கடந்த 2016 ம் வருடம் நானும் எனது அம்மாவும் வீட்டிற்கு நடந்து சென்ற போது ராயல் பேக்கரி அருகில் கூட்டமாக இருந்தனர். என்ன என்று போய் பார்த்த போது கூட்டத்தில் தவறி விழுந்து விட்டேன். அதனால் எனக்கு தலையில் இரத்த காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். போலிசார் வந்து விசாரித்த போது ஆஜர் எதிரிகள் அங்கு நின்று கொண்டிருந்தார் என்று பெயரை மட்டும் குறிப்பிட்டு சொன்னேன். போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்று கொண்டார்கள். என்ன

எழுதினார்கள் என்று தெரியாது.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 30.10.2016 ம் தேதி நானும் எனது அம்மாவும் வீட்டிற்கு நடந்து வந்த போது எனது நண்பர் கருப்புசாமி ராயல் பேக்கரியில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தார் என்றும், என்னை அழைத்ததால் என் அம்மாவை வீட்டிற்கு அனுப்பி விட்டு நான் கருபபுசாமியுடன் டீ சாப்பிட்டு கொண்டிருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் ஏற்கனேவே இருந்த முன் பகைகையை மனதில் வைத்துக் கொண்டு என்னைதகாத வார்த்தையால் திட்டினார்கள் என்றும், கல்லை எடுத்து நடுமண்டைடயில் அடித்தார்கள் என்றும தடுக்க வந்த கருப்புசாமியை ஆஜர்எதிரிகள் கையால் தாக்கினார்கள் என்றும், கொலை மிரட்டல விடுத்தார்கள் என்றும்,போலிசார் விசாரணையிலும் புகார் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவரை இந்த வழக்கிலிருந்து தப்பிவிக்கும பொருட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 12/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 5 P.W.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமார் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

<u>முதல் விசாரணை</u>

நான் புக்குளம் வசித்து வருகிறேன். வேலை செய்து வருகிறேன்.என து அப்பா பெயர் ரங்கசாமி ஆறுமுகம் என்றும் அழைப்பார்கள். வழக்கு பற்றி எதுவும் தெரியாது என் முன்னால் போலிசார் எந்த ஆய்வும் மேற் கொள்ளவில்லை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் எத்தனை என்று தற்போது ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **பார்வை மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைக்கு அடக்கமான கருங்கல் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதுல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்னால் போலிசார் எந்த விதமான பொருளையும் கைப்பற்றவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 30.10.2016 ம் தேதி பன்னீர்செல்வம் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் நானும் எனது நண்பர் செந்தில்குமார் அங்கு நின்று கொண்டிருந்தபோது எங்களை சாட்சியாக வைத்து போலீசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை மாதிரி வரைபடமாக வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு ஆதரவாக நாங்கள் இருவரும் சாட்சி கையப்பம் செய்தோம் என்றும், அதன் பின்பு சம்பவ இடத்தின் அருகில் கிடந்த கைக்கு அடக்கமான கருங்கல் ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள் என்றும், நாங்கள் விவரங்களை அறிந்து கொண்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணை சொல்லிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டால் அவர்களை வழக்கில் இருந்து தப்பி வைக்கும் பொருட்டு காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.